விலை 0–1–0 "NAMNADU" Weekly. Reg. No.

நம்நாடு

நம் நாடு செழிக்க வேண்டும்.

நாமெல்லாம் களிக்க வேண்டும்.

"நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்—இது
நமக்கேயுரிமையாம் என்பதுணர்ந்தோம்"

நிர்வாக ஆசிரியர்: K. பழனிவேலு. உதவி ஆசிரியர்: D. R. தாஸ்.

மலர் 1 } திருச்சி, 19—1—47 விய ஆண்டு தை 6 ஞாயிறு { இதழ் 7

தென்னை மரம் பனைமரமாகிவிட்டதா?

தேங்காய் விலை சகிக்கவில்லையே!

கள்ள மார்க்கெட் வேண்டாம்!

"பஞ்சம்! பஞ்சம்!! பஞ்சம்!!!" என நம நாட்டு மக்கள் பஞ்சப்பாட்டு பாட வேண்டியவர்களாகி விட்டார்கள் என்ன, எதை எடுத்தாலும் பஞ்சமா? அட, பாவமே!

அரிசிப் பஞ்சம், துணிப் பஞ்சம், விறகுப் பஞ்சம், மண்ணெண்ணெய் பஞ்சம் தீப்பெட்டிப் பஞ்சம், சர்க்கரைப் பஞ்சம், வெல்லப் பஞ்சம், நல்லெண்ணெ-தேங்காய் எண்ணெயுடன் தேங்காய் பஞ்சமும் சேர்ந்துகொண்டது! நல்லெண்ணெ விலையோ, காளுக்கு நாள் நல்ல பாம்பின் விஷம் போல் ஏறுகின்றது! தேங்காய் எண்ணெயோ இப்போது மருந்துக்கும் கிடைப்பதில்லை. இதற்கு என்ன காரணம்? இந்நாட்டிலிருக்கும் தென்னை மரங்களெல்லாம் பனை மரமாக மாறிவிட வேண்டுமென்று எந்த பக்தனாவது பாடி விட்டானா? அப்படியெதுவுமில்லையே, தென்னை மரம் தென்னைமரமாகவும், பனை மரம் பனை மரமாகவும் அப்படியேதானே இருக்கின்றது? அப்படியிருக்க அதில் விளைந்தவரும் தேங்காய்களெல்லாம் எங்கே போயிற்று? சாதாரணமாக 0-1-0 அணவுக்கு கிடைத்த தேங்காய் இப்பொழுது 0-6-0 அணா விலைக்குக் கிடைப்பதும் கஷ்டமாகி விட்டதே. இந்த அநீதியை யாரிடம் சொல்லி முறையிடுவது? தென்னிந்தியாவிலேயே நீர் வளமுடைய திருச்சி, தஞ்சை ஜில்லாக்களில் தான் தென்னைமர உற்பத்தி அதிகம், இங்கேயே இப்படியென்றால், மற்ற ஊர்களில் இருக்கும் கிராக்கியைச் சொல்லவும் வேண்டுமா? இதன் காரணத்தை இங்கு கவனிப்போம்.

தஞ்சை ஜில்லா தேங்காய் வியாபாரிகள் சங்கத்தின் தூது கோஷ்டியானது உணவு மந்திரியிடம் சென்று தங்களின் 'கஷ்டங்களை' முறையிட்டு நிவாரணம் கேட்டுக்கொண்டுள்ளது. இம்முறையீட்டில்தான் முக்கியமான ரகசியமெல்லாம் இருக்கின்றது! அதாவது, தஞ்சை ஜில்லாவில் மட்டும் 7,500. எக்கர் நிலத்தில் தென்னை பயிரிடப்படுகின்றது. இவற்றிலிருந்து மகசூலாக 12. கோடி தேங்காய் கிடைக்கின்றது. இவை, வருஷமொன்றிற்கா, ஆறுமாதத்திற்கா அல்லது மூன்று மாதத்திற்கா, என்பதை விபரமாகச் சொல்லவில்லை அவர்களுடைய விஞ்ஞாபனத்தில்! மற்றும், சென்னை நகரில் மட்டும் 1. லக்ஷம் தேங்காய்கள் செலவாவதாகக் கூறியுள்ளது. மற்ற நகரங்களைப் பற்றிய புள்ளி விபரங்களெல்லாம் புதைக்கப்பட்டிருக்கின்றன! ஆனால், இதர இடங்களிலிருந்து (இலங்கை—யாழ்ப்பாணம்) இறக்குமதி செய்யப்பட வேண்டிய தேங்காய்கள் வரவில்லையென்றுமட்டும் குறிப்பிடத் தவறவில்லை! இக்காரணத்துடன் பருவ மழையில்லையென்பதையும் பக்கபலமாகச்சொல்லி, தங்கள் கள்ளமார்க்கெட்டுக்கும், கொள்ளைலாபத்திற்கும் வழிதேடிக்கொண்டிருக்கிறார்கள்! போதாக்குறைக்கு போக்குவரத்தில் தேங்காய்க்கு முக்கியத்வம் கொடுக்கப்படவில்லையென்றும் கூறியிருக்கிறார்கள். இதுபற்றி இவர்கள் போக்குவரத்து அதிகாரிகளிடம் அணுகி தேங்காய்—உணவின்முக்கியத்தை எடுத்துரைத்தும் அதிகாரிகள் அசட்டை செய்தபின்னர்தான் நிலமை இவ்வாறு மோசமானது என்று இவர்களால் கூறமுடியுமா? அதுதான் இல்லை!

மேலே கூறியுள்ளவைகள்தான் தேங்காய் விலை உயர்ந்துவிட்டதற்கு காரணமென்று சொல்லி மேலும் சொல்லுகிறார்கள். போக்குவரத்தில் சௌகரியம் செய்துதரவேண்டுமென்றும், இருக்கும் தேங்காயை (அளவைச்சொல்லவில்லை.) ஏற்றுமதிசெய்ய மூன்றுமாத அவகாசம் கொடுக்கவேண்டுமென்றும், தங்களின் ஒப்பந்தத்தை ஒழுங்காக நடத்த சர்க்கார் உதவிசெய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றனர். ரயில்வசதியேயில்லையென்றாலும் லாரிகள்மூலமாவது தேங்காய் அனுப்பமுடியுமல்லவா? இவற்றை எங்களால்ஆனமட்டும் செய்தோம் என்று வியாபாரிகள்சங்கத்தார் சொல்லுவதற்காவது முன்வருவார்களா? அல்லது, இனிசெய்கின்றோமென்றாவது உறுதிகூறுவார்களா? அதுதான்இல்லை! ஒவ்வொருவருஷத்தின் தேங்காய் உற்பத்தி, தேவைப்பிரதேசங்களுக்கு அனுப்பிய விபரம், உற்பத்திசிலவு, போக்குவரத்தின் சிலவு, இவைகளைப்பற்றிய விபரங்களை சர்க்காருக்கு சரியான கணக்குகளைக் காட்டுவார்களா? தேங்காய் ஏற்றுமதிக்கு இன்னவகையில் வாகனங்கள் இருக்கவேண்டுமென்று திட்டம் செய்து மத்திய சர்க்காரிடம் வாகன வசதி செய்து கொடுக்குமாறு வற்புறுத்துவார்களா? விலை நிர்ணயம் செய்யும்பொழுது சர்க்கார், வியாபாரிகள் பொதுஜனப் பிரதிநிதிகள் ஆகிய இவர்களைக்கொண்ட ஒரு கமிட்டியினால் தான் நிர்ணயிக்கவேண்டுமென்பதை சங்கத்தார் ஒப்புக்கொள்வார்களா? இவர்கள் இவைகளை எளிதில் ஒப்புக்கொள்வார்களென்ன நம்புவதற்கில்லை. இவர்கள் ஒப்புக்கொண்டாலன்றி இனி, தேங்காய் எண்ணெ இவைகளுக்கு என்றென்றும் பஞ்சம் வராதிருக்க முடியுமா? இதைப்போன்ற, மக்களின் சகலதேவைப் பொருள்களின் உற்பத்தி, விநியோகம், விலை நிர்ணயம் என்ற மூன்று வகைகளிலும் சர்க்கார், உற்பத்தியாளர், வியாபாரி, வாங்குவோர், பிரதிநிதிகள் ஆகியோர் ஒரு திட்டமிட்டு நடத்தினால்தான் திடீர் திடீரென்று தினத்துக்கொரு தேவைச் சாமான்களுக்கு பஞ்சம் உண்டாவது பூண்டற்றுப்போகும்! அப்போதுதான் பொதுமக்களும் நிம்மதியாக வாழ முடியும்!!

"நம்நாடு" சந்தா விபரம்

1 வருடம் ரூ. 3—8—0

ஆறு மாதம் ரூ. 2—0—0

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது

மானேஜர்: "நம் நாடு" திருச்சி.

"நம் நாடு"

திருச்சி, 19—1—47 ஞாயிறு

நிலைகுலைந்த : : : : பொங்கல்!

—o—

தமிழர்கள் வாழ்விலே ஓர் திருநாள்! பொங்கற் புது நாள்!! அர்த்தமற்ற - ஆபாசப் பண்டிகைகள் போலல்லாது, பொங்கற் புது நாள் தமிழர்கள் உள்ளபடியே உள மகிழும் நன்னாள். தமிழ் நாட்டில் தமிழ் மக்கள் "இன்பம் பொங்குக, ஏற்றம் பொங்குக. அன்பு பொங்குக, புது வாழ்வு பெறுக" என ஆனந்தக்களிப்புடன் பொங்கற் புது நாளைக் கொண்டாடினர்.

காலை முதல் மாலை வரை கடும் வெய்யிலில் கழனியிலே, மாடோடு மாடாய் உழுது பயிரிட்டு, தண்ணீர்ப் பாய்ச்சி, பக்குவமாய் அறுவடை செய்து, வீட்டுக்குக் கொண்டுவந்து, குத்தித் தீட்டிய புது அரிசியை புதுப்பானையிலிட்டு பால், நெய், பழம் சேர்த்து, இஞ்சி, மஞ்சள், கரும்பு இவைகளால் அலங்கரித்து பொங்கல் செய்து உற்றார், உறவினருடன் உண்டு களித்தனர் நம் நாட்டு மக்கள்—நம் நாட்டு விவசாயிகள். வீதி தோறும் மாவிலை, குறுத்து தோரணங்கள்! மற்றும் கமுகு, வாழைமர அலங்காரங்கள் காட்சியளித்தன. நம் நாடெங்கும் தமிழ்த் திருநாள் கூட்டங்கள் வெகு சிறப்பாக நடைபெற்றன. தமிழர்கள் உள்ளத்திலே ஓர் தனியானந்தம் இருந்தது!

ஆனால், நம் நகர் போன்ற பட்டினங்களிலுள்ள தமிழ் மக்களுக்கு மட்டிலும் இவ்வாண்டுப் பொங்கல் நிலை குலைந்த பொங்கலாகி விட்டது!

புது அரிசி கிடைக்கவில்லை. கல்லும், நெல்லும், நாற்றமும் கொண்ட சிகப்பரிசி கிடைத்தது. சர்க்கரைப் பஞ்சம், வெல்லம் கிடைக்கவில்லை. தேங்காய் விலை ஏற்றம்! இத்தகைய தொல்லைகளோடே இப் பொங்கற் பண்டிகையை ஒருவாறு போக்கி விட்டோம்,

இப் பொங்கற் புத்தாண்டில் நம் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு நம் நாடு, நகரம், கல்வி, தொழில் ஆகிய துறைகளின் சீர்திருந்தத்திற்குப் பாடுபட வேண்டும். தமிழர்களின் வாழ்வு இன்புறவேண்டும். வாழ்க தமிழ் மக்கள்! பொங்குக தமிழர்கள் இன்பம்!!

வர்த்தகத் தொழிலாளர் வாழ்க!

—o—

தொழிலாளர் வர்க்கத்திலேயே மிகவும் பிற்போக்கான ஒரு சமூகம் இருக்கின்றதென்றால் அது வர்த்தகத் தொழிலாளர் சமூகமேயாகும். குறைந்த சம்பளம், நீண்ட நேர வேலை, ஓயாத உழைப்பு, போதிய ஓய்வின்மை ஆகிய இத்தனை கஷ்டங்களையும் அனுபவித்து வருபவர்கள், வர்த்தகத் தொழிலாளர்களே யாவார்கள்.

சாதாரணமாக ஒரு முதலாளியிடத்தில் ஒரு வர்த்தகத் தொழிலாளி 'செக்கு மாட்டை'ப்போன்று எவ்வளவு காலம் உழைத்தாலும், அவனுக்கு அந்த முதலாளி கொடுக்கும் கூலியெனப்படும் 'பிச்சைக்காசைத்' தவிர வேறு எவ்வித உரிமையும், பயனுமின்றி, நியாயமற்ற வேலை நீக்கம் ஏற்படினும் அவன் வெறுங்கையுடன் வீடு திரும்பவேண்டியது தான்!!

இந்த அநீத முறைகளை மாற்றி, இதர தொழிலாளர் சமூகம் அடைந்து வரும், நலன்களைப் போன்று இவர்களும் அடைய வேண்டுமெனக் கிளர்ச்சி செய்ததின் பலனாக நமது மாகாண சர்க்கார் இப்பொழுது வர்த்தகத் தொழிலாளர் நலனுக்காக வென்று வெளியிட்டுள்ள மசோதாவை மகிழ்ச்சிப் பெருக்குடன் வரவேற்கின்றோம். காலம் தாழ்த்தாது இந்த சீர்திருத்தத்தை சர்க்கார் கொண்டுவர முற்பட்டிருப்பதையும் போற்றுகிறோம்.

இம்மசோதாவில் வேலை நேரம், ஓய்வு நேரம், லீவு வசதிகள், அதிக நேரவேலைக்கு "ஓவர்டைம்" முதலியவை எல்லா வர்த்தகத் தொழிலாளிகளுக்கும் ஒழுங்கு படுத்தி உறுதி செய்வதற்கான திட்டங்கள் இருந்தாலும், நியாயமற்ற வேலை நீக்கத்திற்குப் போதிய பாதுகாப்பும், அந்திய காலத்திற்கான ஆதரவும் அம்மசோதாவில் யில்லா திருப்பது தான் பெருங் குறையாகும். இது பற்றி மற்றொரு சமயம் எழுதுகிறோம். வாழ்க, வர்த்தகத் தொழிலாளர்!.

சென்னை சர்க்கார் பின்பற்றுமா?

—:o.—

ஐக்கிய மாகாணஸ்தலஸ் தாபன வாக்காளர் ஜாபிதாவிலும், சர்க்கார் தஸ்தாவேஜிகள், கல்வி ஸ்தாபன தஸ்தாவேஜிகள், கோர்ட்டு சம்மன்கள் தஸ்தாவேஜிகள் முதலிய வற்றிலிருந்தும் ஜாதி உட்பிரிவு வித்தியாசங்களை அகற்றுமாறு அம்மாகாண சர்க்கார் உத்திரவிட்டிருக்கும் விபரத்தையாவருமறிவர். இனி அங்கு ஒவ்வொரு வாக்காளரும், இந்துவா, முஸ்லிமா சீக்கியரா என்பது மட்டும் பதிவு செய்யப்படுமே தவிர, ஜாதி உட்பிரிவு வித்தியாசங்கள் இனி பதிவு செய்யப்படமாட்டாது.

பொதுவாக, இந்து சமுதாயத்தில் இருந்துவரும் கோடிக்கணக்கான பிரிவினைகள் ஒழிந்து யாவரும் ஒன்றுபட்டு வாழ்வதற்கு இத்தகைய சீர் திருத்தம் மிகமிக அவசியமானதாகும். ஒரே இனத்தவர்களாக வாழ்ந்துவந்த நம் தமிழர் சமுதாயத்திலும் இன்று ஜாதிக்குள் ஜாதி, பிரிவுக்குள் பிரிவாகப் பிளவு பட்டுக்கிடக்கும் அநீதமுறைகள் அழிந்து ஒற்றுமையுடன் வாழ்வதற்கு வகைதேடும் நோக்கத்துடன், ஐக்கியமாகாண சர்க்காரை நமது மாகாண சர்க்கார் பின்பற்றுமா?

தமிழ் நாட்டிற்கு சுய நிர்ணயம் வேண்டும்.

சென்ற வாரம் சென்னையில் தமிழ் வாரக் கொண்டாட்டம் தலைவர் திரு. டி. பி. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

"இம்மாபெருங் கூட்டம், தமிழ்த் திருநாளாகிய இன்று எல்லாத் தமிழ் மக்களுக்கும் வாழ்த்துக் கூறுகிறது. சிறப்பாக திருவிதாங்கூர்த் தமிழகம், பிரஞ்சிந்தியத் தமிழகம் ஆகிய இடங்களில் சுயநிர்ணய உரிமைக்காகத் தமிழர் நடத்தும் போராட்டத்துக்கும், தமிழகத்துக்கு வெளியே இலங்கை, மலேயா, பர்மா தென் ஆப்பிரிக்கா முதலிய நாடுகளில் உள்ள தமிழர்கள் உயிர்நாடியான உரிமைகளுக்காக நிகழ்த்தும் வீரம் மிக்க போராட்டத்துக்கும் ஆசி கூறுவதுடன், அவர்களுக்கு எல்லாவிதத்திலும் ஆதரவு நல்குமாறு தமிழ் நாட்டாரைக் கேட்டுக்கொள்கிறது.

"இப்போது டில்லியில் நடந்துவரும அரசியல் நிர்ணய சபை மொழிவாரி நாடுகளைப் பிரிக்கும் வேலையை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்துவதுடன் அப்படிப் பிரிக்குங்கால் திருப்பதி முதல் குமரிவரை உள்ள நிலப்பரப்பைக் கொண்ட புதிய தமிழகத்தை நிறுவப் பாடுபடுமாறு அந் சபையில் தமிழ் நாட்டு அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்கிறது"

"அந்தப்புதிய தமிழகத்தின் அரசியல் அமைப்பை வேறு எவர் தலையீடுமின்றித் நாமே வகுத்துக் கொள்ளத் தமிழருக்குச் சுயநிர்ணய உரிமையுண்டு என்பதை உறுதிப்படுத்துகிறது"

"பழிக்குப்பழி"

[D. R. தாஸ்]

(உரிமையுடையது)

அத்தியாயம் 1.

ம்:–அந்தப்புரத்தின் அருகிலுள்ள வனம்.

திரங்கள்:– ராணி மரகதவல்லி சித்திரலேகா.

ணியும் தோழியும் அங்குள்ள ஓர் பீடத்தில் அமர்ந்துள்ளார்கள்]

திரலேகா:- தேவி! அதோ, ஆனந்த ன சந்திரிகை! இதோ, ரமணீ ா சிங்காரவனம்! இங்குள்ள கொடிகளின்மீது மனோகரமான ாருதம்! மல்லிகை, முல்லை, செண் முதலிய மலர்களின் தளிர்கள் மலால் அசைவது தங்களை ற்பதுபோல் தோன்றுகிறது! தமான மலர்களின் வாசம் நமக்கு ரம்யத்தை உண்டாக்குகின்றது! தாங்கள் ஒரு ரமணீ ரத்னமல்

ணி:– தோழி! நீ சொல்வதுயாவும் மைதான்! ஆனல், என் மனம் ரம் இங்கில்லை!

த்திரலேகா:- மகாராணீ! அது ன? வேறு எதுபற்றி சிந்திக்கின் ள்?

ணி:- எல்லாம் நமது ராஜ்ய விஷ தைப்பற்றிதான்! .வேறென்ன க்கிறது!

த்திரலேகா:-தேவி! சேர்மை மிருந்த ள் ராஜ்யபாரத்தில் மனோவிசாரம் ள்ளும் பாகம் எதுவுமில்லையே! கள் சொல்வது அதிசயமாகவல் வா இருக்கின்றது!

ணி:- சித்திரலேகா! அது க்குத் தெரியாது! அவைகளைக் ட்டு மேலும் என் மனதில் அதிக ாரத்தை அதிகமாக்காமல் விடு!

சித்திரலேகா:- தேவி! இது என்ன ட உத்திரவு? வீரமகா ராணியாகிய கள் மனதில் உள்ள விசாரத்தை ன் தெரிந்துகொள்ளக்கூடாதா?

ராணி:- சித்திரலேகா! அந்த தூமகே வின் மதுரமான பாஷியங்களை நம்பி து சகோதரனை நீலக்கோட் டக்கு ரீஜண்டாக நியமித்தேனல் வா? அந்த விஷயம்தான் இப் பாழுது எனக்கு அதிக மனோவே னையையும், சஞ்சலத்தையும் உண் ாக்கி யிருக்கின்றது! அது மட்டுமா? னக்கு சகிக்க முடியாத கலக்கத் தயும், பயத்தையும் கூடக் கொடுத் ருக்கின்றது!

சித்திரலேகா:- மகாராணியே! இது ன்ன புதுமை? புஜபல பராக்கிரம டைய தங்கள் சகோதரர் யிசவும் ா தர்யமுடையவராயிற்றே! தங்கள் ணைக்கு உட்படும் அரச குலமணியா ற்றே! அவர் அகில உலகத்தையும் சுற்றி ஆங்காங்குள்ள ஆட்சிமுறைகளை அறிந்தவராயிற்றே! அன்பும், தயையு முடையவராயிற்றே! அப்படிப் பட்டவர் விஷயத்திலா, தங்களுக்கு இம்மனோ வேதனை?

ராணி:- சித்திரலேகா! ஆஹா! என்ன மதுரமான மொழிகள்! நீ பிரமாதமாகப் பேசியது போதும் நிறுத்து! அது உனக்குத் தெரியாது என்று நான் அப்போழுதே சொல்லவில்லையா?

சித்திரலேகா:- தேவி! அப்படியானல் தாங்களாவது அந்த உண்மையை எனக்கு சொல்லக்கூடாதா?

ராணி:- சொல்லுகின்றேன்! அதோ, நமது அமிர்தவல்லியும் நம்மை நாடி இங்கு வருகிருள்!

(அமிர்தவல்லி ராணியின் அருகில் வந்து, ராணியை வணங்குகிருள்)

ராணி:- அமிர்தவல்வி! எதுவிஷயமாக இங்கு வந்தாய்?

அமிர்தவல்லி:– ராஜ மகாராணியே இன்று வசந்த விழா-வைபவத்தை முன் னிட்டு தங்கள் ஆக்ஞைப்படியே அநேக நடனப்பெண்கள் நமது அந்தப்புரத் திற்கு வந்துவிட்டார்கள். தங்கள் அழைப்பிற்கிணங்க அநேக ராஜகுலப் பெண்களும் விஜயஞ் செய்திருக்கின் ருர்கள். நடன மண்டபமும் தீபாலங் காரமும் ஜெகஜ்ஜோதியாக விளங்கு கின்றது! தங்கள் வருகைக்காக அனை வரும் ஆவலுடன எதிர்நோக்கிக் காத் திருக்கின்ருர்கள்!

ராணி:- (சித்திரலேகாவை நோக்கி) சித்திரலேகா! அடாடா! பார்த்த னையா? இவ்வளவு நேரம் ஞாபக மில்லாமல் அல்லவா, இங்கு தங்கிவிட் டோம்! நீயாவது எனக்கு ஞாபகப் படுத்தியிருக்கக்கூடாதா? சரி, நேரமா கிவிட்டது; வா, போகலாம்!

(ராணியும், சித்திரலேகாவும், அமிர்த வல்லியும் அந்தப்புரத்தை நோக்கி செல்லுகிருர்கள்.)

அத்தியாயம் 2.

இடம்:-- ராணி மரகதவல்லியின் அந்தப்புரம்.

பாத்திரங்கள்:- ராணி மரகதவல்லி ராஜகுலப் பெண்கள், பல தோழிப் பெண்கள், அநேக நடனப் பெண்கள்.

(அந்தப்புரத்திலுள்ள நடன மண் டபம் மிகமிக அலங்காரமாக விளங்கு கின்றது. ராஜகுலப் பெண்களும், நடனப் பெண்களும், தோழிமார்களும் தங்கள் தங்கள் ஆசனங்களில் அமர்ந் துள்ளார்கள். மகாராணி விசேஷ ஆடை ஆபரணங்கள் அணிந்து நடன மண்டபத்திற்குள் பிரவேசித்து அங் குள்ள ஒரு அழகிய பீடத்தில் அமரு கிருள்.)

எல்லோரும்:- மகாராணிக்கு ஜே! மகா ராணிக்கு ஜே! மகாராணிக்கு ஜே! (என்று எழுந்து நின்று கோஷிக்கின் ருர்கள்.)

ராணி:- (மகிழ்ச்சியுடன்) மங்களம் உண்டாகுக! மங்களம் உண்டாகுக! எனது ராஜ்யத்திலுள்ள எனது மக் களின் க்ஷேமாபிவிர்த்தியை முன்னிட்டு

ஒரிஜினல்

திருமூர்த்தி வைரங்கள்.

[அசல் வைரம்போல் பிரகாசிப்பது.]

REGD. No 122203

எங்கள் சொந்தப் பார்வையில் கைதேர்ந்த வேலையாட்களைக் கொண்டு தயாரித்த வைரங்களை மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்பனை செய்கிறோம். கலர் கமலங்களும் எங்களிடம் கிடைக்கும்.

வெளியூர் ஆர்டர்களை உடனுக்குடன் கவனிக்கப்படும்.

புரோப்ரைட்டர்கள்:- M. இருளப்பிள்ளை & பிரதர்ஸ்,

நடு கல்லுக்காரத்தெரு. திருச்சினப்பள்ளி.

"பழிக்குப்பழி"

—o—

எனது முன்னோர்களால் பல்லாண்டுகளாகக் கொண்டாடப்பட்டு வந்த இம் மகோன்னதமான வஸந்த விழாவை நாமும் கொண்டாடுவதற்காக இங்கு கூடியிருக்கின்றோம்! இங்கு விஜயம் செய்துள்ள எனது ராஜகுல சகோதரிகளுக்கும் ஏனையோருக்கும் எனது வாழ்த்து உரியதாகுக.!

(சபையிலுள்ள அனைவரும் ஆனந்த பரவசமடையும்படியாக லாவண்யமான பாதநாட்டியம் நடைபெறுகின்றது. பணிப் பெண்கள் யாவருக்கும் சந்தன தாம்பூலம் வழங்குகின்றார்கள்.)

ராணி:- சகோதரிகளே! தோழிமார்களே! இந்த ஆனந்தமான வசந்த விழா வைபவமானது நம்மால் மிக்க மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது! எனது அன்பான அழைப்பிற்கிணங்கி இங்கு வந்து கூடியுள்ள உங்கள் அனைவருக்கும் மீண்டுமொருமுறை எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்! மங்களம் உண்டாகுக! மங்களம் உண்டாகுக.!

சித்ரலேகா:- மகாராணி! நமது ராஜ்யத்தைச் சேர்ந்த எல்லாப் பகுதிகளிலுமுள்ள நமது பிரதி நிதிகள், இன்று நம்மைப் போலவே இவ்விழாவை சிறப்புடன் கொண்டாடுவார்களலலவா?

ராணி:- ஆம்! கொண்டாடுவார்கள்! ஆனால...?

சித்திரலேகா:- தேவி! ஆனால் என்று நிறுத்திக் கொண்டீர்களே! அது ஏன்?

ராணி:- சித்திரலேகா! எல்லோரும் கொணடாடுவார்கள்! ஆனால், அரண்மனை வாழ்வும், அரசபோகமும் தனக்குச் சொந்தமாகி விட்டதென்று ஆணவம்கொண்டு அலைகின்றானே, அந்தக் குலத்துரோகி! அவன் கொண்டாடுவானா என்பதுதான் எனக்கு சந்தேகமாயிருக்கின்றது.!

சித்திரலேகா:- தேவி! மன்னிக்க வேண்டும! இந்த மங்களகரமான, வேளையில் அந்த விபரீத நிகழ்ச்சியைத் தங்களிடமிருந்து நான் அறிவதற்கு விரும்பவில்லை!. எல்லாம் நன்மையாக முடிய வேண்டுமென்பதே எனது இருதய பூர்வமான எண்ணம்! (சபை கலைகின்றது. இரவு அதிக நேரமாகி விட்டபடியால், உணவுக்குப் பின் ராணி தனது சயன அறைக்குச் செல்லுகிறாள்.)

ஃ ஃ ஃ

(நடுநிசி வேளை; அந்தப்புர நிலாமணி முற்றத்திலுள்ள அம்ச தூளிகா சயனத்தில் அரசி அயர்ந்து நித்திரை செய்கிறாள். அவ்வேளையில் திடுக்கிடத்தக்க ஒரு கனவு கண்டு விழித்து.)

ராணி:- (திக்பிரமையுடன்) ஹா! என்ன? நான் கண்டது கனவா? அல்லது உண்மைச் சம்பவமா? ஆம! உண்மைச் சம்பவமே! இல்லை!— — இல்லை!— — இல்லை! கனவுதான்! "ராணி மரகதவல்லியின் ராஜ வம்சத்திற்கே அழியாத அவமானம்!" என்று கூறினார்களே! அவை உண்மைதானா? அந்தோ! இதென்ன! ராணி மரகதத்தின் ராஜ வம்சத்திற்கா அவமானம்? ஐயோ! இது என்ன விபரீதம்! "மக்கள் படும் அவஸ்தையைக் கண்ணால் பார்க்க முடியவில்லையே, இந்தப் பாபியை நீணடாக நியமிக்க அந்த ராணிக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் பாருங்கள்" என்றெல்லம் பிரஜைகள் பேசுவது என் காதில் விழுந்தனவே! அந்தோ! அந்தோ! நான் யாது செய்வேன்! (என்று கூறியபடி, கலவரத்தோடு தனது சயனத்தில் படுத்து நித்திரை செய்கிறாள்.)

(ராணி கண்டகனவின் பிற்பகுதி நிகழ்ச்சியாக வருகிறது.)

(தொடரும்)

கணவனில்லாத கலியாணம்!

காட்டு ஜாதியின் விநோத மணம்!

—o—

கலியாண தினத்தில் மாப்பிள்ளையில்லை என்றால் அது என்னவோ வேடிக்கைப் பேச்சுமாதிரியிருக்கலாம. ஆனால் நியூஜிலாந்து தீவுகளுக்கருகிலுள்ள தென் சமுத்திரத் தீவுகளில் வசிக்கும் காட்டு ஜாதியினரிடை "கல்யாணத்தன்று மாப்பிள்ளை ஆஜராயிப்பதில்லையாம்."

இந்த விநோதம்பற்றி "ட்ரூ" என்ற அமெரிக்க சஞ்சிகையில் உலகம் சுற்றிய ஒரு பிரமுகர் சுவாரஸ்யமான கதையொன்று எழுதியுள்ளார். அக்கதை இங்கே தரப்படுகிறது:-

உலகம் சுற்றிய பிரமுகர் எழுதுகிறார்:- "சில பாதிரிமார்களுடன் நியூஜிலாந்து பக்கத்திலுள்ள தென் சமுத்திர தீவுகளில் நான் பிரயாணம் செய்து ஆராய்ச்சிகள் நடத்தினேன். அத்தீவுகளில் ஒன்றில் சில காலம் நாங்கள் வசிக்க நேரிட்டது.

அச்சமயம் பருஸ்கா என்ற காட்டு ஜாதி மனிதன் எனக்கு வேலைக்காரனாக அமர்ந்தான். இந்த வர்த்தமானத்தில் பருஸ்காவின் மணத்தின் இரவு கடந்த விநோதத்தை சொல்லுகிறேன்.

பருஸ்காவை "மாப்பிள்ளையாக" ஒரு நங்கை பிடித்துவிட்டாள்.

அவனைப் 'பிடித்துவிட்டாள்" என்றால் மிருகத்தைப் பிடிப்பதுபோலவா என்று கேட்கவேண்டாம். அந்தக் காட்டு ஜாதியினர் வழக்கத்தைச் சொல்லுகிறேன், தெரிந்துகொள்ளுங்கள். காட்டு ஜாதிப் பெண்கள் திடீரென்று "மாப்பிள்ளை வேட்டைக்கு" ஆர்ப்பாட்டமாகப் புறப்படுவார்கள். அம்மாதிரி ஒரு சமயம் புறப்பட்டபோது எத்தனையோ நங்கைக்கு அந்த பருஸ்கா மீது கண். இவனும் நல்ல ஆண் சிங்கம்தான். வேட்டையில் இந்த சிங்கத்தை வீழ்த்தினவள், இவன் எங்கேயோ பராக்குப் பார்த்துக்கொண்டிருந்தபோது குறிபார்த்து ஒரு கல்லை இவன் தலையில் வீசிவிட்டாள். அந்த அதிர்ச்சியில் பருஸ்கா மூர்ச்சையாகி விழுந்துவிட அந்தப்பெண்ணும் அவனைத் தன் குடிசைக்கு இழுத்துக் கொண்டுபோய் மூர்ச்சை தெளிவித்து சிஸ்ருஷை செய்தாள். இந்த உபசாரத்தின் பலனாக அவன் அவள் கணவனாகி அவளுக்கு ஊழியம செய்யக் கடமைப் பட்டவனாகிவிட்டான் பருஸ்காவின் மணப்பெண் தனது ஜாதியாசாரத்தை வைதீகமாகப் பின்பற்றி இப்படி ஒரு புருஷனைத் தேடிவிட்டாள்! எண்ணெய்களையும் பூசி தேகம் பளபள வென்று மின்ன மாப்பிள்ளை சித்தமானான்.

"இன்று மத்தியானமே வீட்டிற்கு நீ போக விரும்பினால் போகலாம்" என்று நான் சொன்னேன். அவன்மீது பூசப்பட்ட எண்ணெய்களின் மணமே என்னை இப்படிச் சொல்லத் தூண்டியது. அந்த எண்ணெயின் வாசனை ஒரு மைலுக்கு அப்பால் போய்விட்டால் நல்லதென நான் நினைத்தேன்'

"நான் எங்கே போகப்போகிறேன்?. என்றான் அவன்.

எனக்கு ஆச்சர்யமாய் விட்டது. "உன் மனைவியிடம் உல்லாசமாகயிருக்க முன்னாலேயே நீ போகவிரும்பவில்லையா?" என்று கேட்டேன்.

பருஸ்கா என் வார்த்தையைக் கேட்டுத்துள்ளிக் குதித்தான். பெரிய அபசாரமான வார்த்தையைக் காதில் வாங்கினவன் போலிருந்தது அவன் முகபாவம்.

"சே! சே! அது எதற்கு? இன்றைக்கு பருஸ்காவுக்கு கலியாணம், அவன் மண வீட்டுக்குப் போகக்கூடாது என்றான் அவன்.

என் வார்த்தையைக் கேட்டு அவன் ஆச்சரியமடைந்ததைவிட அவன் வார்த்தையைக் கேட்ட எனக்கு ஆச்சரியமதிகமாயிற்று. கலியாண தினத்தில் மாப்பிள்ளை போகக்கூடாதென்றால் பெரிய வேடிக்கைப் பேச்சாயிருக்கிறதே என்று நினைத்தேன். விபரமாக அவனிடம் விசாரிக்க ஆரம்பித்தேன்.

"பருஸ்கா! இன்று உங்களுக்கு கலியாண தினமல்லவா?" என்று கேட்டேன்.

"ஆம்! ஆம்! என்றான் அவன்—"

"இன்று எவ்வளவு நேரத்திற்கு நீ அங்கே போகவேண்டும்?"

"ஐயையோ! இன்று நான் அங்கு போககூடாது."

"நீ வேறு இடத்திலிருப்பாயா?' என்று நான் மறுத்துக் கேட்டேன்.

பருஸ்கா பிறகு சிறு குழந்தையின் அசட்டுக் கேள்விகளுக்குத தகப்பனார் பதில் சொல்லும் பாவத்தில் பேசலானான்.

"கலியாண தினத்தன்று மாப்பிள்ளை வேறு இடத்திலிருக்க வேண்டியதுதான் முறைமை. மணப் பெண்ணின் பழைய காதலர்கள்தான் அத்தினத்தில்

(5-ம்பக்கம் பார்க்க)

ஹோட்டல்காரர்கள் கள்ள மார்க்கெட் நடத்துகிருர்களா?

தீப்பெட்டிப் பஞ்சம் தீரவில்லையே!

திருச்சி ஜில்லா உணவு கமிட்டியின் மாதாந்தரக் கூட்டம் சென்ற வாரம் ஜில்லா கலெக்டர் தலைமையில் நடந்தது பிப்ரவரி மீ முதல் வாரத்திலிருந்து கிராமாந்தரங்களில் ரேஷனை எடுத்துவிட வேண்டுமென்று டாக்டர் டி. எஸ். என். ராஜன் கொண்டுவந்த பிரேரணைக்கு கமிட்டி சம்மதித்தது. கிராமாந்தரங்களில் நெல், அரிசி விநியோகத்தை கட்டுப்படுத்த வேண்டுமென்றும் தீர்மானித்தது. தற்போது ஜில்லாவிலுள்ள ஸ்டாக் நிலைமை அபிவிருத்தியடைந்திருப்பதால் உபதானியங்களின் போக்குவாத்தை கட்டுப்படுத்தவேண்டுவதில்லை என்றும் கலெக்டர் கூறினார். கோதுமையை அதிகமாக உபயோகப்படுத்த வேண்டுமென்று சர்க்கார் பிரச்சாரம் செய்யும் செலவை நிறுத்தவேண்டுமென்ற டாக்டர் ராஜனின் யோசனை ஏற்கப்பட்டது. முசிரியில் ஒரு மிருக வைத்தியசாலையும், ஒரு ஆபீசரும் நியமிக்க வேண்டுமென்று டாக்டர் ராஜன் கூறிய யோசனையை சிபார்சு செய்வதாக கமிட்டி தீர்மானித்தது கொள்முதல் முறைகளைப்பற்றி கமிட்டி பூரணமாக விவாதித்தது. கிராமக் கமிட்டிகளின் அறிக்கைகள் அவ்வளவு திருப்திகரமாக இல்லை என்று கலெக்டர் கூறினார். ஸ்டாக் வைத்திருப்பவர்கள் தாங்களாகவே தங்கள் ஸ்டாக்குகளை கொடுக்க வேண்டுமென்றும், அவர்களிடையே கமிட்டி மெம்பர்கள் பொது ஜன சேவா உணர்ச்சியை புகுத்த வேண்டுமென்றும் கலெக்டர் கூறினார்.

வெல்ல நிலைமை மிகவும் மோசமாய் இருக்கிறதென்றும், கன்ட்ரோல் கொண்டுவரப் பட்டதால் வெல்ல விலையும், பூரா சர்க்கரை விலையும் 50-சத விகிதம் குறைந்திருந்தாலும் கூட ஸ்டாக் இருக்குமிடமே தெரியவில்லை என்றும், பொங்கல் பண்டிகையை உத்தேசித்து பிப்ரவரி மீ வெல்லம் கிடைக்கும் வரையில் கட்டுப்பாட்டை தளர்த்தும்படி தான் சர்க்காரை கேட்டிருப்பதாகவும் கலெக்டர் கூறினார்.

கொள் முதல் ஏஜன்ஸி விஷயமாகவும் விரிவான விவாதம் நடந்தது. கூட்டுறவு ஏஜன்ஸிமூலம் பரிசோதனைக்காக லால்குடி தாலுகாவில் கொள்முதல் நடத்திப் பார்ப்பதென்றும் தீர்மானிக்கப் பட்டது. இம்மாதத்திலிருந்து திருச்சினுப்பள்ளிக்கு 15-டன் சர்க்கரை அதிகமாக கொடுக்கப்பட்டிருக்கிறதென்று கலெக்டர் அறிவித்தார். இந்த அதிகப்படி சர்க்கரையை அப்படியே கிராமாந்தரங்களுக்கு கொடுத்துவிட வேண்டுமென்று டாக்டர் ராஜன் சொன்னதற்கு இவைகளை தாலுகாக்களுக்கென பிரத்தியேகமாக ஒதுக்கியிருப்பதாக கலெக்டர் கூறினார்.

ஹோட்டல்காரர்எல்லாம் சர்க்கரையை கள்ள மார்க்கெட்டில் வியாபாரம் செய்கிருர்களென்று தான் நிச்சயமாக நம்புவதாகவும் தீப்பெட்டி பஞ்சம் அதிகமாக இருக்கிறதென்றும் கான்பகதூர் ஜி. எஸ். ஏ. சரீம் கூறினார்.

—o—

நீண்டகால அனுபவம்பெற்ற எமது வாடிக்கைக்காரர்களுக்கு
ஓர் நற்செய்தி!

வந்துவிட்டது! வந்துவிட்டது!

அசல் ரெங்கூன் வைரங்கள்.

(எங்கள்)

கண்டோர் புகழும் கனகா வைரங்கள்!
பாரோர் புகழும் பவுன் மார்க் பாரிஸ் வைரங்கள்!!
நாகரீக அணிகளுக்கு நாயகமென ஒலிக்கும்
எமது வைரங்களை வாங்கி பரீக்ஷியுங்கள்.

வேண்டுவோர்கள் விபரங்களுக்கு எழுதுக.

Prop:- T. S. தங்கவேலுப் பிள்ளை,

ஷராப் வியாபாரம், பெரியகடைவீதி, திருச்சினுப்பள்ளி.

வெளியூர் ஆர்டர்களை உடனே கவனிக்கப்படும்.

கணவனில்லாத கல்யாணம்

—o—

(காலாம்பக்கத் தொடர்ச்சி)

அவ் வீட்டிற்கு வருவார்கள் இவர்களைத் தள்ளி விட்டுத்தானே வேறு ஒருவனை மாப்பிள்ளையாக அவள் வரித்துவிட்டாள்! ஆகவே கடைசித் தடவையாக அவர்களிடம் தன் அன்பைக் காட்டி அவர்களிடம் உபசாரம் சொல்லி அனுப்பவேண்டாமா? இன்று தான் கடைசிதடவை அவள் அவர்களுடன் பிரியமாயிருப்பது, நாளையிலிருந்துஅப்படியிருக்கக்கூடாது ஆகவே பருஸ்கா அசந்தர்ப்பமாக இன்று அங்கிருக்கக்கூடாது" என்ருன் அவன்.

பருஸ்காவின் வார்த்தை இன்னெரு விதத்தில் எனக்கு ஆச்சரியமளித்தது. தேசத்தை இத்தனை எண்ணெய்களால எதற்காக அவன் பளபளப்பாக்கிஞன் என்பது புரியவில்லை.

"நீ சொல்லுவது சரிதான். அப்படியானல் உனக்கு ஏன் இந்த அலங்காரம்?" என்று நான் கேட்டேன்.

"என் காதலியாயிருந்த ஓர் பெண் இன்றிரவு நான் அவளிடம் போய் கடைசி முறையாகப்பார்த்து காதல் விடை பெற்றுக்கொண்டு வரவேண்டும். இதற்காக அவள் என்னை அழைத்திருக்கிருள்" என்று சொல்லி பருஸ்கா புன்னகை புரிந்தான்.

"பேஷ்! நீ உன் காதலியிடம் இப்படிப் போகும்போது அவளுடைய மாப்பிள்ளை அங்கே ஆஜராகயிருக்க மாட்டான் என்று நினைக்கிறேன்" என்றேன்.

—

சர்வதேச ஸ்தாபனம்.

—

(சென்றவாரத் தொடர்ச்சி)

இந்த ஸ்தாபனம் பொதுவாக ஒரு நாடு மற்றொரு நாட்டின்மீது யுத்தம் தொடங்காமல் இருப்பதற்கே ஏற்படுத்தப்பட்டதாகும். எதாவது ஒரு நாடு சட்ட விரோதமாக பிற நாட்டின்மீது யுத்தம் தொடர்ந்தால் எல்லா நாடுகளும் ஒன்றுபட்டு அந் நாட்டின் மீது பலமான நடவடிக்கைகளை எடுக்க முயற்சிக்கும். இது பற்றி இன்னும் விரிவாக பின்னர் வெளிவரும்.

—

இந்தியாவின் ரத்தினம்!

தேன் கூடு பல்பொடி

பல்பொடிகளில் சிறந்தது!
பல் வலியைப் போக்குவது!!
பற்களை பிரகாசிக்கச் செய்வது!!!

எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை.

தயாரிப்பவர்:-

R. துரைசாமி நாயுடு,
பாரதி கெமிக்கல் ஒர்க்ஸ்,
சின்ன செளக், திருச்சி.

ஒரிஜினல்
லக்ஷ்மி மார்க் எலக்ட்ரோ வைரங்கள்

பூரிப்பும், ஜொலிப்பும் உடையது.
எல்லா சைஸ்களிலும் கிடைக்கும்.
தேவைக்கு எழுதினல் கேட்லாக் இனும்.
தயாரிப்பவர் :—
S. நம்பெருமாள் செட்டி,
பெரிய பஜார், திருச்சினுப்பள்ளி.

முருகன் லாரி சர்வீஸ், ஈரோடு.
★
நம்பிக்கையுடன் குறித்த காலத்தில் குறைந்த சார்ஜுக்கு லாரிகள் கிடைக்கும்.
விபரங்கள் நேரிலும், கடித மூலமும் தெரிந்து கொள்ளலாம்.
P. ராமசாமி முதலியார், *Managing Director*.

Lilly Flower Engineering Works.
லில்லி பிளவர் இஞ்சினீயரிங் ஒர்க்ஸ்,
பெரியகம்மாளத்தெரு, திருச்சி.

இரும்பு மிஷின் சம்பந்தமான கடசல் வேலைகளும், கட்டிடத்திற்கு வேண்டிய ஸ்பிரிங் கேட்டுகளும், இதர வேலைகளும் குறித்த காலத்தில் நவீன முறையில் செய்து கொடுக்கப்படும்.
புரோப்ரைட்டர் :— P. சுப்ரமண்ய ஆச்சாரி,
பெரியகம்மாளத்தெரு, திருச்சி.

நேர்த்தியான வேலை!
உயரிய முறையில் குறித்த காலத்தில் குறைந்த ரேட்டில் உங்களுக்குத் தேவையான பிளாக்குகள், ரப்பர் ஸ்டாம்புகள், சினிமா சிலைடுகள் செய்துகொடுக்கப்படும். நல்ல ஷாத்துகளுடன் டிரேடு மார்க் ரிஜிஸ்தர்களும் செய்துகொடுக்கப்படும். வெளியூர் ஆர்டர்களை உடனுக்குடன் கவனிக்கப்படும்.
விபரங்களுக்கு :-
K. A. ஹமீத்.
கவுஸ்கான் மக்கான்,
திருச்சினுப்பள்ளி.

முகப்மதியர் டீ ஸ்டால்
ஈரோடு ரயில்வே ஸ்டேஷன்

ருசிகரமான பதார்த்தங்களும் இனிய தேயிலை பானமும், ஈரோடு ரயில்வே ஸ்டேஷன் 3வது பிளாட்பாரத்தில் கிடைக்கும். ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.
Prop:- T. P. A

உங்கள் வர்த்தகம் ஓங்க
"நம்நாடு"வில்
விளம்பரம் செய்யுங்கள்.

அறிஞர் விருந்து!

[தி. ரா. த.]

மனித குணம்!

ஒரு தனி மனிதன் எந்தக்கட்சியை சேர்ந்தவனுய் இருக்கட்டும், பரவாயில்லை ஆனல் அம்மனிதன் "கடமை" என்று சொல்லும் சொல்லுக்கு உட்பட்டவனுய் இருக்கிருன். ஆதலால் கடமையை மறவாமல் செய்வதே மனித குணம். —காந்தி

பிறவிப் பயன்!

வித்தைக்காரன்! ஜாலக்காரன் எப்படித்தான் கற்ற மாயா ஜாலத்தை கூட்டத்தில் காட்டி காசு பறித்து வாழ்க்கை நடத்துகிருனே; அப்படி நாம் பணத்தை சம்பாதித்து வாழ்க்கை நடத்தல் கூடாது; நாம் வாழ்க்கையில் ஒரு லட்சியம் தோன்றவெண்டும். அதுவே பிறவியெடுத்ததின் பயன். —விவேகாநந்தர்

சமூக வேற்றுமை!

ஆண்டவன் சந்நதியில் அரசன் யார்? பணக்காரன் யார்? பட்டதாரி யார்? ஏழை யார்? குடியானவன் யார்? குடிக்காரன் யார்? அனைவரும் ஒன்றே! அனைவரும் அவருடைய அன்பின் வடிவம் அவருடைய குழந்தைகள். அதைப்போல் நாம் சமூகத்தில் ஆண், பெண் என்ற சமூக வேறுபாட்டை தவிர; வேறு எந்த விதத்திலும் சமூகத்தில் வேறுபாடு கிடையவே கிடையாது; கூடவும் கூடாது. —மாளவியா

மோச வர்த்தகம்!

உலகத்தில் எந்தக்கட்சி புகழ் பெற்று வருகின்றதோ, அல்லது எந்த மனிதண் புகழ் பெற்று வருகிருனே, அவன் பெயரில், அக்கட்சியின் பெயரில் வியாபாரக்காரர்கள் வியாபாரம் செய்து வருகின்ருர்கள், இப்படுமோச வியாபாரம் தொலைய வேண்டும் அப்பொழுதுதான் ஏழைகளின் குறைகளில் ஒன்று நிவர்த்தியான மாதிரியாகும். —நேரு

நாடு நலமடைய!

தேசத்திற்காக தன் வாழ்வையே தியாகம் செய்தாலும் அவன் தியாகியல்ல! முதல் தியாகம் செய்கின்றவன் தன் குடும்ப சீர்திருத்தத்திற்கும், தன் சுற்றத்தாருடைய சீர்திருத்தத்திற்கும் தியாகம் செய்யவேண்டும். ஒவ்வொரு வாலிபனும் ஒவ்வொரு குடும்பத்திற்கு வாழ்வை தியாகம் செய்தானே யானல் சீக்கிரம் நம் கிராமம், நம் நகரம் நம் பட்டணம் சுகமடையும் என்பது திண்ணம். —சித்தரஞ்சன் தாஸ்

ஒவ்வொரு டாலர்!

ஒரு நாட்டின் பெருமை, அந் நாட்டின் இலக்கிய கர்த்தாக்களையும், தியாகிகளையும் பொறுத்திருக்கிறது. அசனல் வாலிபர்களே! உங்களுடைய ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு டாலருக்கு சமமாகும். —இந்திய விஞ்ஞானக்காரர்

Edited & Published by K. Palanivelu, & Printed at The Sri Ragupathi Press, Trichinopoly.